HMOP. No.174/2024

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள் – 23.01.2026

எ.ம.சா.1– வீரத்துரை த/பெ – வேலுச்சாமி

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) இவ்வழக்கில் தாக்கல் செய்த எதிருரையை நான் படித்து பார்த்து கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். எதிருரையில் 16.09.2015ம் தேதி விருதுநகரில் உள்ள அருள்மிகு ஸ்ரீபாலசுப்பிரமணியன் கோவில் வைத்து திருமணம் நடைபெற்றதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான், எங்கள் திருமணம் விருதுநகர், நகராட்சி சமுதாயகூடத்தில் வைத்து நடந்தது. வழக்கிற்காக சமுதாயகூடத்தில் வைத்து திருமணம் நடந்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் திருமணம் முடிந்த நாள் முதல் தற்போது வரை சிதம்பர நாடார் பள்ளி வேன் டிரைவராக வேலை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல, முதலில் ஸ்ரீவித்யா பள்ளியில் வேன் டிரைவராக வேலை பார்த்தேன், அதன் பின்னர் தற்போது சிதம்பர நாடார் பள்ளி வேன் டிரைவராக வேலை செய்து வருகிறேன். எதிருரையில் திருமணத்தின் போது சிதம்பர நாடார் பள்ளி வேன் டிரைவராக வேலை செய்து வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2) எனது இரண்டாவது பெண் குழந்தைக்கு 4 வயது முதல் சக்கரை வியாதி உள்ளது. சக்கரை வியாதிக்கு தினமும் ஊசி போட வேண்டும் என்றால் சரிதான். மேற்படி மருந்தினை குளிர்சாதன பெட்டியில் வைத்து பாதுகாக்க வேண்டும் என்றால் சரிதான். எங்கள் திருமணம் பெரியோர்களால் நிச்சயக்கப்பட்ட திருமணம் ஆகும். எங்கள்

திருமணத்தில் கலந்து கொண்டவர்களை விசாரித்தால் எவ்வளவு நகை மற்றும் சீதன பொருட்கள் கொடுக்கப்பட்டது தெரியவரும் என்றால் சரிதான். மனுதாரர் திருமணத்தின் போது கொண்டு வந்த 5 பவுன் நகை, குளிர்சாதன பெட்டி மற்றும் சீதன பொருட்கள் தற்போது வரை என் கைவசம் உள்ளது என்றால் சரியல்ல, சீதன பொருட்கள் எதுவும் வாங்கவில்லை.

3) எனது மகளின் தினசரி சிகிச்சைக்கான மருந்துகளை பராமரிப்பதற்காக மேற்படி குளிர்சாதன பெட்டியை கேட்டும் தற்போது நான் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கு உண்மையில் எனது மகள் மீது அக்கறை இல்லை என்றால் சரியல்ல. எனது மனைவி குறிப்பாக எந்த தேதியில் எந்த செல்போன் நம்பருக்கு பேசினார் என எதிருரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். விருதுநகர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் எனது மனைவி கொடுத்த புகாரின் பேரில் விசாரணைக்கு நாங்கள் இருவரும் ஆஜரானோம். அந்த விசாரணையின் போது காவல்நிலையத்தில் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடி கொள்வதாக நான் சொன்னதால் புகார் முடிக்கப்பட்டது என்றால் சரியல்ல, மனுதாரர் இரண்டு மாதம் கால அவகாசம் கேட்டார். நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடி கொள்ள காவல்நிலையத்தில் சொல்லியதாக எதிருரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

4) எனது மனைவி கடந்த 1.1/2 வருடமாக என்னை பிரிந்து வாழ்ந்து வருகிறார். சேர்ந்து வாழக்கோரி சட்ட அறிவிப்பு அனுப்பவில்லை, நீதிமன்றத்தில் சேர்ந்து வாழ பேசினோம். சேர்ந்து வாழக்கோரி தனியாக வழக்கு தாக்கல் செய்யவில்லை, இவ்வழக்கில் சேர்ந்து வாழக்கேட்டு

எதிருரை தாக்கல் செய்துள்ளேன். எனக்கு சேர்ந்து வாழ வேண்டும் என்ற எண்ணம் இருந்தால் சட்டபடி நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றும், சேர்ந்து வாழ எண்ணம் இல்லாததால் பெயரளவில் அது பற்றி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நாங்கள் பிரிந்த பின்னர் எனது இரண்டாவது மகளின் மருத்துவ செலவிற்கு பணம் கொடுத்துள்ளேன். அது பற்றி எதிருரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் நான் பெற்ற மகளுக்கு செய்த செலவை சொல்ல விரும்பவில்லை.

5) நான் எப்போதும் எனது மகளை பார்க்கவில்லை என்றும், செலவிற்கு பணம் கொடுக்கவில்லை என்றும் அதனால் தான் அது பற்றி சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது இரண்டு குழந்தைகளின் எதிர்காலம் கருதி அவர்கள் பெயரில் வைப்பீடு எதுவும் செய்துள்ளேனா என்றால் அஞ்சல் துறையில் சேமிப்பு கணக்கு வைத்துள்ளேன். பொண் மகள் திட்டத்தில் எனது மகள் பிறந்தது முதல் மாதம் ரூ.1,000/– செலுத்தி வருகிறேன். ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செலுத்தி வருகிறேன். நான் சொல்வது போல் எனது மகள்கள் பெயரில் எந்த சேமிப்பும் செலுத்தவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சமரசம் பேச சென்ற பெரியவர்கள் பற்றி குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான், எனது மனைவியின் தாயாருக்கும் அது பற்றி தெரியும்.

6) 04.08.2024 ம் தேதி டி.கல்லுப்பட்டி காவல்நிலையத்தில் கொடுத்த புகார் பொய் என்பதால் அது முடிக்கப்பட்டது என்றால் சரியல்ல, நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் மேற்படி புகார்

முடிக்கப்பட்டது. மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ்ந்த காலத்தில் தினமும் மது அருந்திவிட்டு அடித்து கொடுமைப்படுத்தினேன் என்றால் சரியல்ல, எனக்கு மது பழக்கம் இல்லை. நான் எனது மனைவியின் நடத்தையின் மீது சந்தேகப்பட்டு அவருக்கு குடும்ப செலவிற்கு பணம் கொடுக்காமல் பொருளாதார ரீதியாக கொடுமைப்படுத்தினேன் என்றால் சரியல்ல, நான் செலவிற்கு பணம் கொடுத்தேன். அதனால் தான் மனுதாரர் பென்டகன் நிறுவனத்தில் வேலைக்கு சேர்ந்து குடும்பத்தை காப்பாற்றினார் என்றால் 8 மாதம் வேலை பார்த்து ஆடம்பர செலவு செய்தார். வழக்கிற்காக அவ்வாறு பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கணவன் என்ற ஸ்தானத்தில் மனுதாருக்கு எந்தவொரு கடமையும் முறையாக செய்யவில்லை என்றால் சரியல்ல. ஜீவனாம்சம் கொடுக்க வேண்டும் என்பதை தவிர்ப்பதற்காக மனுதாருடன் சேர்ந்து வாழ வேண்டும் என்று எதிருரையில் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.